தரமான தெளிவான
போட்டோஸ்ரட்
பிரதிகளுக்கு
சன்லைற்
றைக்கிளீனேர்ஸ்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 117 சனி 02-06-1990 வைகாசி 19) துல்ஹஃதா 08

High Speed Service
in Dry Cleaning
1 Hour Service
Sunlight
Dry Cleaners
JAFFNA

# வடக்கு, கிழக்கில் விரைவில்
# நேர்மை வழியிலான தேர்தல்!

## புலிகளுடனான சந்திப்பில் 'பிரேமா' அறிவிப்பு
## இன ஒற்றுமை, புரிந்துணர்வு பற்றியும் வலியுறுத்து

"வடக்கு, கிழக்கில் அரசியல் வெறுமை நிலையை நீக்கி வைப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அங்கு நேர்மையாக நடத்தப்படும் தேர்தலில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ கொழும்பில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக் குழுவினரை வரவேற்றுப் பேசுகையில் உறுதியளித்தார்,

''பேச்சுவார்த்தை மூலம் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றினைக் காண்பதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.பல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கமுடியும் என்ற குறிக்கோளுடன் அரசாங்கம் பலநடவடிக்கைகளை மேற் கொண்டுவருகின்றது.' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி விடுதலைப்
—08 ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி, ஆனையிறவு
## ராணுவ முகாம்களுக்கு ஹெலிகோப்டரில் சாக்குகள்

கிளிநொச்சி, ஆனையிறவு ஆகிய இடங்களில் உள்ள இலங்கை இராணுவ முகாம்களுக்கு வெற்றுச் சாக்குகள், பொதிகளாகக் கட்டி வழங்கப் பட்டுள்ளது.

இச்சாக்குகள் அடங்கிய பொதிகள் யாவும் இராணுவ ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி, ஆனையிறவு முகாம்களில் இறக்கப்பட்டது

பாதுகாப்பைப் பலப்படுத்தவே இதன் நோக்கமெனக் கருதப்படுகிறது. (ஸ்ரீ)

### கல்வித்திணைக்கள
## எழுதுவினைஞர் இடமாற்றத்திற்குழு தனியான சபை அமைப்பு

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வித் திணைக்களம் மற்றும் பாடசாலைகளில் பணிபுரியும் எழுதுவினைஞர் மற்றும் பணியாளர்களுக்கு என தனியான இடமாற்றச் சபை அமைக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சில் எழுதுவினைஞர் போன்ற சேவைகளில் உள்ளோர் இவ் இடமாற்றசபை மூலமே இனிமேல் இட மாற்றம் செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7கி)

## காங்கேசன் சீமெந்து ஆலை வழிகாட்டிகள் பற்றாக்குறை

காங்கேசன் சீமெந்து ஆலையின் தொழிற்பாட்டை விளக்குவதற்கான 'வழிகாட்டிகள்'' (Guides) இல்லாமையினால் தொழிற்சாலை ஊழியர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

நிலைமைகள் சுமுகமானதைத் தொடர்ந்து தற்போது காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைக்கு நாளாந்தம் எட்டு முதல் பத்து வரையிலான பாடசாலைகள் தொழிற்
— 8ம் பக்கம் பார்க்க

### நயினை உற்சவத்தில்
## இலங்கை வங்கிக் கிளை

எதிர்வரும் 23-ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக விருக்கும் நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் இலங்கை வங்கி தனது கிளை அலுவலகம் ஒன்றினை நயினாதீவில் அமைக்கவுள்ளது. (ஸ்ரீ19)

### இடைக்காடு கிராம
## அபிவிருத்திச்சங்க அங்கத்தவர்க்கு 1000 ரூபா விவசாயக் கடன்

இடைக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் திணைக்களத்தினால் விவசாயக் கடனாக ரூபா பதினையாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் சங்கத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பதினைந்து அங்கத்தவர்களுக்கு ஒருவருக்கு ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.சிவகுமாரனின் முயற்சியால் இக்கடன் சங்கத்திற்கு வழங்கப்பட்டதாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார். (33 கி)

## கிளிநொச்சியில்......

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்ட 'முரசொலி' பிரதிகள் கிளிநொச்சி பஸ் நிலையத்தில் வைத்து சிலரால் தீக்கிரையாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை வழமைபோல் கிளிநொச்சிக்கு முரசொலிப் பிரதிகள் அனுப்பப்பட்ட வேளை அவற்றை பலவந்தமாக மனித நாகரிகத்திற்கே முற்றுமுழுதாக களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் கும்பலொன்று தீக்கிரையாக்கி தமது வெறித்தனத்தைக் காட்டியுள்ளனது. இக்கும்பல் இக்கைங்கரியத்தைச் செய்தவேளை போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது — 8 ஆம் பக்கம் பார்க்க

### குறிகாட்டுவான் இறங்கு துறையில்
## படகுகள் பரீட்சித்து அனுமதி வழங்கப்படவுள்ளது

குறிகாட்டுவான் நயினாதீவு இறங்குதுறைகளுக்கிடையே நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலங்களில் பிரயாணிகளை ஏற்றி இறக்கக்கூடிய சகல மோட்டார் படகுகளின் உரிமையாளர்களும் தங்களின் படகுகளின் சகல ஆவணங்களுடன் எதிர் வரும் 7ம் திகதி குறிகாட்டுவான் இறங்குதுறை முகத்தில் மோட்டார் படகுகள் சகிதம் காலை 9மணிக்கு
—08ஆம் பக்கம் பார்க்க

### பௌர்ணமிக் கலைவிழா
## நாவலர் மண்டபத்தில் 7ம் திகதி நிகழ ஏற்பாடு

வன் செயல்கள் இடம் பெறுவதற்கு முன் யாழ் திறந்த வெளியரங்கில் நடைபெற்று வந்த பௌர்ணமி கலைவிழாவினை இனிமேல் நாவலர் மண்டபத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் திறந்த வெளியரங்கில் மாதந்தோறும் சிறப்பான முறையில் நடைபெற்று வந்த பௌர்ணமிக் கலைவிழா இந்திய இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் தடைப்பட்டிருந்தது.

மீண்டும் இக்கலைவிழாவினை திறந்த வெளியரங்கில் நடாத்த உள்ளதாகவும் பாதிப்ப
— 08ஆம் பக்கம் பார்க்க

# இந்திய ராணுவத்தை அழைத்ததில் எவ்வித புதுமையும் இல்லை என்கிறார் ஜெயவர்தனா

''இலங்கைக்கு இந்தியப் படைகளை அழைத்ததில் எந்தவித புதுமையும் இல்லை'' என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.


'சமாதான ஒப்பந்தமும் இலங்கையின் ஒற்றுமையும்'' என்ற தலைப்பிலான சொற்பொழிவொன்றை திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று கொழும்பு சட்டக்கல்லூரியில் நிகழ்த்தினார்

அவர் அங்கு மேலும் பேசுகையில் ''பெரிய நாடுகளாயினும் சிறிய நாடுகளாயினும் அவை எதிரிகளின் படையெடுப்புக்குள்ளாவது வழக்கம் இலங்கையில் சிங்கள மன்னர் தாம் ஆட்சிக்கு வருவதற்கோ அல்லது ஆட்சியை ஸதிரப் படுத்தவோ இந்திய படையை அழைத்திருந்தனர்.

இங்கு வந்த இந்தியப் படைகள் திரும்பி சென்றது கிடையாது அதற்கான அவசியமும் அவற்றிற்கிருக்கவில்லை. எனினும் இந்திய அமைதிப்படை இங்கு நிபந்தனையுடன் தான் வந்தது.

இலங்கை அதன் நேசநாடான இந்தியாவிடம் இராணுவ உதவி கோரியதில் எவ்வித புதுமையும் இல்லை
— 8ம் பக்கம் பார்க்க

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



**கா. ச. நடராசா வரதராஜ்**
**K. S. NADARAJAH VARADARAJ**

தோற்றம் 24 - 6 - 1949 — மறைவு 2 - 6 - 1989


பாசத்துடன் வளர்த்து பாதியில் பறிகொடுத்த
பாவிகள் நாங்கள் உனது சகோதர சகோதரிகள்
உனது பாசம் உணர முன்னே உன்னை
இழந்த மகள் சத்யை மனைவி ரத்தி, மருமக்கள்
மற்றும் உறவினர்கள் வேண்டுவது
இறைவனிடம் உமது ஆத்மசாந்தி

55. நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்

ஜானகி, தேவகி,
மகேந்திரன் (மித்திரன்)
Bobby தனராசா

06006

## முதலாம் ஆண்டு நினைவு ஆராதனை



**ஞானப்பிரகாசம் சத்வஞானம்**

தோற்றம் 25. 10. 1958 — ஆண்டவரழைப்பு 2 .6. 1989

''எங்கள் மனத்தோட்டத்தில் மலர்ந்திருந்த இந்த மனிதமலர், மரணச் சகதியினுள் மூழ்கி மறைந்து ஓராண்டு நிறைந்தாலும்; அன்பெனும் தீபத்தாலும், ஆசையெனும் பூஜையாலும் என்றும் நாம் ஆராதிப்போம்.''

டச்சுறோட்,
சண்டிலிப்பாய்.

அப்பா, அம்மா, அக்கா, தம்பி
அவுஸ்திரேலியா சகோதரி, மச்சான்மார், மாமிமார், மாமன்மார்,
உறவினர்.

06005

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. நாகமணி பொன்னுத்துரை

(நிப்பொன் ரெலி ரவல்ஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்)

மறைவு: 26 - 05 - 1988 — திதி: 02 - 06 - 1990

ஆண்டு இரண்டு சென்றாலும்
மாறாத நினைவுடனே
மானிலத்தில் வாழ்கின்றோம்
நீங்கள் வகுத்துத்தந்த நற்பாதையிலேயே
அடியெடுத்துச் செல்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்

இல:9, குமார வீதி,
நல்லூர்.

அன்பு மனைவி
மகன்

060007

# விஞ்ஞான யுகத்திலும் இங்கு இந்த நிலை ஏன்?

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலங்களில் இடம் பெற்றுவரும் மரணங்களில் பாம்புக்கடி. நாய்க்கடி ஆகியவைகளும் மிகமுக்கியமான பங்கினை வகிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தினசரி பத்திரிகைகளைப் படித்து வருபவர்கள் இவ்வாறான மரணச் செய்திகளை நிச்சயமாக அவதானித்திருக்க முடியும்.

இவற்றுள் பெரும்பாலான சம்பவங்களும் யாழ்ப்பாண மாநகரத்துக்கு வெளியிலுள்ள கிராமப் பகுதிகளிலும், சில பட்டணப் பகுதிகளிலுமே இடம் பெற்றுள்ளன.

ஏறத்தாழ பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பாம்பு, நாய் ஆகியவைகள் கடித்து விட்டால் வைத்தியம் செய்ய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு முன்னரே சம்பந்தப்பட்டவர்கள் மரணமடைந்து விடுவது சர்வ சாதாரணமாக இடம்பெற்று வந்தது.

ஆனால் இன்றுள்ள நிலைமை அவ்வாறானதல்ல.

வளர்ந்துவிட்ட விஞ்ஞான யுகத்தில், கொடிய விஷப்பாம்புக் கடிக்கும், வெறி கொண்ட விசர்நாய்க்கடிக்கும் கூட மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன.

இந்த மருந்துகள் யாழ்ப்பாணக் குடாநாட்டு ஆஸ்பத்திரிகளில் போதியளவு இருப்பதாக சுகாதார சேவைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இப்படியிருந்த போதிலும் இதனால் நிகழும் மரணங்கள் தொடர்ந்து ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

கிராமப் புறங்களுக்கு வெளியே வாழும் மக்கள் பாம்பு, நாய் கடித்து விட்டால் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்று இன்னமும் சரியாகத் தெரியாதிருப்பது ஒரு காரணமாகவிருக்கலாம்.

கட்டாக்காலி நாய்களை வீதிகளில் அலைந்து திரிய அனுமதிப்பது மற்றக் காரணமாக விருக்கலாம்.

இரண்டாவதாக நாம் இங்கே குறிப்பிட்டுள்ள விடயத்தைக் கவனிக்கப் பொதுமக்களும், உள்ளூராட்சி அமைப்புக்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

வீதிகளில் அலைந்து திரியும், நாய்களே கூடுதலாக விசர் நாய்களாகமாறி, மனிதர்களைப் பதம் பார்த்து விடுகின்றன.

இதற்கு உடனடி வைத்தியம் செய்யத்தவறுமிடத்து, அது ஏர்ப்பு ஆக மாறும் போது, முடிவு இலகுவான மரணமாகிவிடுகின்றது.

இந்த விடயத்தில் நாயினால் கடியுண்டவரை உடனடியாக அருகிலுள்ள பிரதான ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதுடன், சம்பந்தப்பட்டநாயையும் உடனடியாகப் பிடித்துக் கட்டி வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

நாய்க்கடியிலும் பார்க்க, பாம்புக்கடியே பயங்கரமானது, மோசமானதும் கூட.

சில வேளைகளில் சில மணித்தியாலங்களுக்குள் பாம்புக்கடி மரணத்தை ஏற்படுத்தி விடலாம்.

எனவே பாம்பினால் கடியுண்டவர்கள் எத்தனை வயதானவர்களாகவிருந்தாலும், அவர்களை உடனடியாக அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லல் வேண்டும்.

சில சமயம் பாம்பினால் கடியுண்டவர்கள் மரணமானவர் போல மயக்கத்திற்குள்ளாகியிருக்கலாம். அப்படியான போதிலும் அவரைத் தாமதியாது ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வது அவசியமாகும்.

உரிய நேரத்தில் நோயாளியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதன் மூலம் அவரது உயிரைக் காப்பாற்ற முடியும்.

இதனால் அநியாயமான பல மரணங்களைத் தவிர்ப்பதற்கு இடமுண்டு.

இது தொடர்பான போதிய பிரசாரங்களைச் சுகாதாரப் பகுதியினர் மேற்கொள்ள வேண்டும்.

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பூரணமான உதவியைச் சம்பந்தப்பட்டவர்கள் இதற்குப் பயன்படுத்தினால் என்ன?

## இதயநாதம்

சனிக்கிழமை 02—06—1990

### நல்வாக்கு

உங்களுடைய படிப்பு, அனுபவம் முதலியவற்றைவிட முக்கியமான தகுதி ஒன்று உண்டு. எந்த ஒரு வேலையிலும், தொழிலிலும் விடாப்பிடியாக கடினமாக உழைக்கும் மன உறுதிதான் அந்தத் தலையாய தகுதி.

—ஹென்றி போர்டு

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

---

## உங்கள் உடலைப்பற்றி நீங்களே அறிந்து கொள்ளுங்கள்

# மாறுகண் இருந்தால் அதிர்ஷ்டமா?

உங்கள் கண்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குக் கண்ணைப்பற்றி நீங்கள முதலில் அறிந்து கொள்ள வேண்டும். கண்ணின் முக்கிய செயற்பாடுகளைப் பற்றி பிரபல கண் வைத்தியர் ஒருவர் எழுதிய கட்டுரை இங்கு குறிப்பு வடிவில் வாசகர்களுக்குத் தரப்படுகின்றது.

கண் ஒரு காமிரா மாதிரி. விழித்திரையில் படிகிற விம்பம் கண் நரம்பின் வழியாக மூளைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது. அங்கே 'விஷுவல் கார்டக்ஸ்' என்கிற பகுதியில் உணரப்பட்டு 'நமக்கு முன்னால் நிற்கிற விஷயம் இதுதான்' என்று மூளை அறிகிறது.

இப்போதெல்லாம் கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து மாதிரியான குறைகளுக்குக் கண்ணாடி அணிய வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டது என்பது தெரிந்த விஷயம் தான். அதற்குப் பதிலாகக் கண்ணில் பொருத்திக் கொள்கிற மாதிரி 'காண்டக்ட் லென்ஸ்'கள் வந்து விட்டன. அதிலும் பல வகை உண்டு, அவற்றில் முக்கியமானவை. Hard, Semi-Soft- Soft, Extended wear போன்றவை. ஒரு காண்டக்ட் லென்ஸை எட்டு முதல் பதினான்கு மணிநேரம் வரை தொடர்ந்து அணியலாம்.

கண்ணில் ஏற்படுகிற சதை வளர்ச்சிதான் 'காட்ராக்ட்' என்ற பரவலான கருத்து சரியில்லை. உண்மையில் கண்ணில் இருக்கிற கண்ணாடி போன்ற லென்ஸ் மெள்ள மெள்ளத் தெளிவு குறைந்து வெள்ளை அல்லது பழுப்பு நிறத்துக்கு மாறிவிடுவதுதான் காட்ராக்ட்.

இதனால் எந்தப் பிம்பமும் பார்வை நரம்புவரை ஊடுருவிப்போக முடியாமல் பார்க்கிற சக்தி குறைகிறது. இந்த காட்ராக்ட் ஐந்து வழிகளில் உண்டாகலாம்.

Senile காட்ராக்ட்-இதுவயதாவதன் காரணமாக ஏற்பகிறது.

Congenitalகாட்ராக்ட் -இது குழந்தைகள் பிறக்கிறபோதே கூட உருவாகியிருக்கலாம் சில சமயம் பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இந்தக் குறை உண்டாகும்.

Traumatic காட்ராக்ட் - கண்களில் உண்டாகும் காயம், கண்ணில் படுகிற தீப்பொறி, பிசிறு போன்றவற்றால் இந்தப் பாதிப்பு உண்டாகிறது.

சர்க்கரை வியாதி மற்றும் சில நோய்கள் இருப்பவர்களுக்கு Pathalogical காட்ராக்ட் வருகிறது. சர்க்கரை வியாதி உள்ள எல்லோருக்குமே இது வரும் என்று சொல்ல முடியாது.

'கண்களிலேயே இருக்கும் வியாதியினால் Complicated காட்ராக்ட் உண்டாகலாம்.

இந்த ஐந்து வகையையுமே அறுவை சிகிச்சை மூலம்குணப்படுத்திவிட வாய்ப்பு இருகிறது.

கண்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பொது விதி.நாற்பது வயதைத் தாண்டி விட்டால் கண்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்பது கட்டாய விதி.

சிலருக்குக் கண்களில் 'பிரஷர்' அதிகமாகி Glaucoma என்ற குறை உண்டாகிவிடுகிறது. இதனால் பார்வை நரம்புகள் பாதிக்கப்பட்டுக் கண் பார்வையையே இழக்க வாய்ப்பு இருக்கிறது. சரியான நேரத்தில் உஷாராகிவிட்டால்

—5 ம் பக்கம் பார்க்க

★ கண் சிவந்துவிட்டால் உடனடியாக டாக்டரை அணுகி பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

★ இரவில் படிக்கும்போதுபோதியவெளிச்சம் இருக்கவேண்டும். மங்கிய வெளிச்சத்தில் படிக்கக்கூடாது.

★ தொடர்ந்து தலைவலி இருப்பவர்கள் கண்ணைப் பரிசோதிப்பது நல்லது.

★ சூரியனையும், சூரியகிரகணத்தையும் நேரடியாகப் பார்க்கக் கூடாது.

★ சிறு குழந்தைகளுக்கு கண்ணில் ஏற்படும் மாற்றங்களை உணர முடியாது.அதனால் அடிக்கடி மருத்துவமனை சென்று பரிசோதிப்பது நல்லது.

★ விறகு அடுப்பில் உண்டாகும் புகை கண்ணில்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தூசி, பிசிறு கண்ணில் விழுந்தால் கண்ணைக் கசக்கக் கூடாது. தண்ணீரில் அலம்ப வேண்டும்.

★ கண்ணாடிஅணிந்துள்ளவர்கள்இரண்டு வருடத்துக்கு ஒரு முறை பரிசோதித்துவர வேண்டும்.

டி.வி-யை எட்டு முதல் பத்து அடிதூரம் அமர்ந்து பார்க்க வேண்டும்.போர்ட்டபிள் என்றால் ஆறடி ஓகே!

# கொட்டாவியும் தொற்று நோய்தான்

அடிக்கடி கொட்டாவிடுகிறவர்கள் 'டல்'லான பேர்வழிகள் என்று பொதுவானகருத்து உண்டு.

ராபர்ட் ப்ராவின் என்ற மனோதத்துவ நிபுணர் கொட்டாவ்யைப் பற்றி ரொம்ப நாள் ஆராய்ச்சி செய்தார். அவரது ஆராய்ச்சி முடிவில் தெரிய வந்த ஆறுபாயிண்ட்டுகள்:

போரடிக்கிற டி.வி.நிகழ்ச்சி ஒன்றைப் பத்துப் பேரையும், பத்துப் பேரை படு ஜாலியான வீடியோ காஸெட் ஒன்றையும் பார்க்கச் செய்தார் ப்ராவின். டி.வி. பார்த்தவர்கள் மட்டும் கொஞ்ச நேரத்தில் வரிசையாய்க் கொட்டாவி விடத்தொடங்கினார்கள். இதனால் தெரிய வருவது - ரொம்ப போரடிக்கிறபோது கொட்டாவி தானாகவே வருகிறது.

மூச்சு விடுதல், ரத்த ஓட்டம், நரம்பு மண்டலம் ஆகியவற்றின் செயல்பாட்டில் கொட்டாவி விடும்போது மாறுதல் உண்டாகிறது. அதாவது, ஓய்வு எடுக்கும் போது உடம்புக்குள் என்ன மாற்றம் தேவையோ, அந்த மாற்றத்தைக் கொட்டாவி உண்டாக்கித் தருகிறது.

நுரையீரலுக்கு வருகிறஆக்ஸிஜன் அளவு குறையும்போது கொட்டாவிவருகிறது. அப்போது அகல வாய்திறந்து மூச்சை நன்றாய் உள்ளிழுத்து அப்புறம் நீளமாய் கார்பன்டை ஆக்ஸைட்டை வெளியேற்றுவதால் ஆக்ஸிஜன் தேவை பூர்த்தியாகிறது என்று சிலடாக்டர்கள் கருத்து இருந்தது. ப்ராவின் செய்த ஆராய்ச்சி இதை 'தப்பு' என்கிறது. சுத்த ஆக்ஸிஜன் நிரம்பிய அறையில் சிலரையும், அசுத்த காற்று நிறைந்த இடத்தில் (கஷ்டப்பட்டு) சிலரையும் நெடுநேரம் இருக்க வைத்தார். அவர் இரண்டு கோஷ்டி விட்ட கொட்டாவி அளவிலும் வித்தியாசம் இல்லை.

தூங்கப்போனபோது மட்டுமல்ல, காலையில் எழுந்திருக்கும்போதும் கொட்டாவி வருகிறது. ஏன்? 'கொஞ்சம் தூங்கினால் தேவலை .. என்று நமக்கு அறிவிக்கிற அதே கொட்டாவிதான் தூங்கி எழுந்தும் 'ரத்த ஓட்டத்தை வேகப்படுத்தி உடம்புக்குச் சுறுசுறுப்பு உண்டாக்கவும் உபயோகப்படுகிறது என்கிறார். ப்ராவின்.

கொட்டாவி விடுகிற சமயத்தில் மண்டை ஓட்டுக்குள் காற்றழுத்தம் அதிகமாகிறது, அதனால்தான் அந்தச்சமயத்தில் மட்டும் காது அடைத்துக் கொண்டாற்போல் ஒரு உணர்வு உண்டாகிறது.

கொட்டாவி விடுகிற காட்சியை க்ளோஸப்பில் பதிவு செய்து சிலருக்குத் திரும்பத் 'திரும்பப் போட்டுக் காட்டப்பட்டது. அதேசமயம். க்ளோஸப்பில் ஒரு பெண் சிரிக்கிற காட்சியும் வேறுசிலருக்கு 'ஆக்ஷன். ரீ-ப்ளே' செய்யப்பட்டது. கொட்டாவியை ரசித்தவர்கள் அதைப் பார்த்துக்கொண்டே தாங்களும் கொட்டாவி விட்டனர். பின்னவர்கள் கொட்டாவி விடவில்லை. என்ன தெரிகிறது? கொட்டாவி பற்றி நினைத்தாலோ, பார்த்தாலோ படித்தாலோ கொட்டாவி வருகிறது. ஆக நமது பொதுவான நம்பிக்கை நிஜம். கொட்டாவி தொற்றுநோய் (?) தான் !

# சொக்கன் மணிவிழா சிறப்புமலர்

## தமிழ்க்கலை வடிவத்தின் பலதுறைகளில் விளங்குபவர்

பழந்தமிழ் இலக்கியப் பண்புகளில் ஊறி அக்கருத்துக் கோட்பாடுகளையெல்லாம் உள்வாங்கி தனது தனித்துவமான, முற்போக்கான சிந்தனையைத்தன் எழுத்துக்களிலும் சொற்பொழிவுகளிலும் வெளிக்கொணர்பவர் வித்துவான் திரு.க. சொக்கலிங்கம் M.A அவர்கள். வித்துவான் என்றவுடனே பல்லுடைக்கும் கடின தமிழும் அரைத்த மாவையே அரைப்பதுபோல சொல்லப்பட்டவற்றையே சுய சிந்தனை வரட்சியில் திரும்பத் திரும்ப அழுத்தி அழுத்திச் சொல்லும் இலக்கண இலக்கிய மரபுகளுக்கே முன்னுரிமையளிக்கும் தன்மைதான் தரிசனமாகின்றது. ஆனால் சொக்கன் அவர்களின் ஆக்கப்பணிகளிலே இத்தன்மைகள் அதிகம் தலை நீட்டுவதில்லை. ஆழ்ந்த இலக்கியப் புலமை இவரிடம் மேம்பட்டுக் காணப்படினும் காலத்தோடு ஒட்டி ஒழுகுந் தன்மையில் ஒன்றிவிட்ட வீச்சையும் காணலாம்.

பல்வேறாய தமிழ்க்கலை வடிவங்களிலும் அகலக்கால் பதித்துள்ள சொக்கன் அவர்கள் ஒரிரு துறைகளிலே கூடிய கவனம் செலுத்தியிருப்பின், அதன் தலைமைத்துவமே இவரிடம் தஞ்சமாகியிருக்கும் எனச் சிந்திக்கும் வேளையிலே சிறுகதை, கட்டுரை, நாவல், கவிதை, நாடகம் மொழிபெயர்ப்பு மரபுவழி இலக்கியம் போன்ற எல்லா வடிவங்களும் இவரிடம் சரணடைவது போல எளிமையில் எல்லோருக்கும் கைவரும் எனவும் கொள்ள முடியாது. இவை தவிர திரு.சொக்கன்

**பத்மா சோமகாந்தன்**

அவர்கள் உரையாற்றும் போது சொற்கள் தாமாகவே வந்து பொழியும் அழகும் இனிமையும் அலட்டலற்ற சொற்செட்டும் கருத்தாழமும் சுவையும் சேர்ந்த சொல்லாட்சி இவருக்குக் கைவந்த கலையே. இவரது உரைக்கோவைகளிலே பொருத்தமான உதாரணங்களும் மென்மையான நகைச்சுவையும் சொல்ல வந்த பொருளைத் துல்லியமாக, விளங்க வைக்கும் செம்மையும் இழையோடுவது கண்கூடு. இதுவோ அதுவோ என்ற ஐயப்பாட்டிற்கு இடமின்றித் திட்டவட்டமாகத் தன்னை வெளிப்படுத்தி நிற்கும் தன்மை இவருடைய ஆக்கங்களிலே துலாம்பரமாக விரவிக் கிடக்கும்.

சொக்கன் எளிமையானவர் பழகுவதற்கு இனியவர். காலம் இடமிருந்து செயலாற்றுபவர். சுறுசுறுப்பானவர். அவர் பங்கேற்காத தமிழ் விழாக்களோ ஆய்வரங்குகளோ, இலக்கியக் கூட்டங்களோ, நூல் வெளியீடுகளோ, உரையரங்குகளோ இல்லையெனஇயம்பின் மிகையில்லை. இத்தகைய அரங்குகளிலும் அவர் தன்னை இனங்காட்டிக் கொள்வதோடு வெகு நாகரிகமாகவே செயற்படுவார். சில வேளைகளிலே சில கருத்தரங்குகளில் கருத்துரைப்போர் கொடுக்கப்பட்ட தலைப்புக்கும் அவரது உரைக்கும் எவ்வித தொடர்புமின்றியே பொழிந்து தள்ளுவார். சிலர் தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு எதிரான கருத்தக்கே அதிக அழுத்தம் கொடுத்து முழங்கித் தள்ளுவார். சிலர் நக்கலிலும் நையாண்டியிலும் சபையோரை சிரிக்க வைத்து தன்கடமையை



மறந்து ஏதோ சொல்லிக் கொண்டே போவார். சிலர் தமக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தைப் பற்றிச் சிறிதும் சுரணையின்றி தரே பொழிவாகப் பொழிந்து தள்ளுவார், ஆனால், சொக்கன் அவர்கள் மேடை நாகரீகம் நன்கு தெரிந்தவர். தான்எடுத்துக்கொண்ட தலைப்பை மையமாகக் கொண்டே அவரின் உரை உவமான உவமேயங்கள், உதாரணங்கள், சிறு சம்பவங்கள், மேற்கோள்கள், கருத்து விளக்கங்கள் முதலியன அமைந்திருக்கும். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிச்சபையோரைச் சலிக்க வைக்கும் போக்கு இவரிடம் கிஞ்கித்தும் கிடையாது. இதற்கு மேடை நாகரிகம் என்ற இவருடைய கட்டுரையே சான்றாகும்.

ஆசிரியர், கொத்தணி அதிபர், கட்டுரையாளர் கவிஞர், சொற்பொழிவாளர் எனப் பல்வேறு பொறுப்புக்களையும் கடைமகளையும் சுமந்து கொண்டிருக்கும் சொக்கன் தாம் ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சியில் பங்குகொள்ள அதற்குரிய வேளையிலும் சற்று முன்னதாவே அவையில் எழுந்தருளியிருப்பார், பல்வேறு துறைகளில் தொழிற்துறைகளில் தொழிற்பட்டாலும் கூட இந்த வயதிலும் சாதாரண மிதி வண்டியிலே பவனி வரும் இவர் நேரதாமதமாகிச் சமூகமளிப்பது அரிதினும் அரிது. நேரத்தின் அருமையறிந்து அதனைப் பேணுவதிலும் கருத்துமிக்கவர்.

சொக்கன் அவர்களைத் தமது அங்கத்தவராகவோ, ஆலோசகராகவோ பதவியாளராகவோ கொள்ளாத தமிழோடுயியைந்த் சங்கங்களோ கழகங்களோ, சபைகளோ அரிது எனலாம். தாம் உறுப்பினராக அமைந்துள்ள அவைகளிலும் தெட்டத் தெளிவாகத் தன் கருத்துக்களை முன் வைத்துத் தனது கடமைகளை ஒருங்கமைவோடு ஆற்றம் வல்லமையும் வாய்க்கப் பெற்றவர்.

இவருடைய தமிழ்ப் புலமைக்கு இவரது ஆங்கில அறிவும் உறுதுணையாயுள்ளது. பல்வேறு மொழிகளையும் அறிந்துள்ள இலக்கிய கர்த்தாக்கள் தனியொரு மொழியறிந்த படைப்பாளிகளைப் போலன்றி ஏனைய மொழிகளிலுள்ள இலக்கிய வடிவங்களையும் உள்ளடக்க, உத்திகளையும் செழுமைகளையும் உணர்ந்து, தாம் உணர்ந்தவற்றை நமது தமிழ் இலக்கியப் பரப்போடு ஒப்பிட்டு, எடை பார்த்து தமது கற்பனை ஆற்றலுக் கேற்ப மேன்மேலும் தம்மை வளத்துக்கொள்ளக் கூடியதாயமைவதோடு, இவ்வுந்துதலினால் எமது மொழிக்கும் விளக்கம் சேர்க்கமுடியும்.

இத்தகைய உந்துதலின் ஒரு வெளிப்பாடுதான் 'சத்தியஜித் ரேயின்' பக்திச் சந் என்ற மொழிபெயர்ப்பு நாவல்.

இனிய சாரீர வளம் கொண்ட சொக்கன் கர்நாடக இசையைத்தொடர்ந்து கற்காவிட்டாலும், தேவார புராணங்களையெல்லாம் அவற்றுக்குரிய பண்ணோடு சீர்பிரித்துப் பொருள்விளங்கப் பாடுவார். மாணவப் பருவத்தில் நாடகங்களில் பாடி நடித்துப் பாராட்டும் பெற்றவர்.

சாகித்திய அக்கடமிப் பரிசு இரண்டினையும் கலைக்கழக நாடகப்பரிசுகள் இரண்டினையும் சொக்கன் அவர்கள் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பல சிறப்புக்கள் பொருந்திய இப்பல்கலைத் திறைமை சகலி எப்படி உருவாகினார்? ...... 1961ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்த கலைச் செல்வி என்ற மாதாந்த சஞ்சிசையில் தான் உருவான தன்மையைப் பற்றி 'என்னை உருவாக்கியவர்கள்' என்ற தலைப்பிலே அவரே கூறுகிறார். கேளுங்கள்'

''இரவு வேளை அரிக்கன் லாம்பு ஒன்று விறாந்தையில் தூங்குகிறது. வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், கல்கி, பஸ்கிம் சந்திரர், ம. வே. திருஞான சம்பந்தர், ஈ. பி. இராசையா நெல்லையா முதலான கதாசிரியர்கள் அந்த விறாந்தையிலே தங்கள்கதைக் கட்டுகளை அவிழ்க்கத் தொடங்கிறார்கள் அந்தப் பத்துவயதுச் சிறுவன் (சொக்கன்) தன்னை, தன்படிப்பை மறந்து கதை நூல்களுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான். இந்த ஒழுக்கைச் செய்தவர் கதைப் பைத்தியமான எஸ்.பி நாகரத்தினம் என்பவர் நாடகம் எழுதுவது, நடிப்பது, கதைகள் வாசிப்பது அவைபற்றிச் கர்ச்சை செய்வது போன்ற விடயங்களிலே ஈடுபாடு கொண்டவர்.

ஓய்வொழிச்சலின்றி இலக்கியத் தேடலில் ஈடுபட்டிருக்கும் இவர் தன் அறிவுப் பரப்பை சகல நூல்களையும் வாசிப்பதனால் விசாலமாக்கியுள்ளார், இவர் சைவத்துக்கும், தமிழுக்கும் மேன்மேலும் தொண்டாற்றி மகிழ இறைவன் இன்னருள் புரிவானாக!

நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனக்குருமணி
ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிகஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்சுவாமிகள்

## ஆசியுரை

தகை சார்ந்த சைவப் பெரியீர்

அறிஞர் திரு. க. சொக்கலிங்கம் M.A அவர்கட்கு ''மணிவிழா'' எடுக்க விருப்பதறிந்து பெரு மகிழ்ச்சி ஒரு தகுதி வாய்ந்த பெரியாரைக் கௌரவிப்பதனால் அவர் வாழ்நாளில் இதைச் செய்யும் போது தான் அவர் மகிழ்ச்சியுறுவார். இதைக் காணும்போது நாமும் உள்ளப்பூரிப் படைவோம். இதுவே முக்கிய நோக்கம். இவர் பட்டம் பாராட்டுக்களை விரும்பாதவர் இதனை இவர் அணியும் ஆடம்பரம்மில்லாத உடையும் சொக்கன் என்னும் புனைப் பெயரும் சான்றுபகர்வன இந் நாட்டில் மட்டுமல்ல தமிழகத்திலும் சொக்கனை அறியாத தமிழ் மக்கள் இலர் எனலாம். அமரர் வாசீக கலாநிதி கி. வா. ஐ ஐயா அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். தாம் எழுதுவது போல பேசுவார். தாம் பேசுவது போல் எழுதுவார். இத்திறன் வாய்க்கப் பெற்றோர் மிகச்சிலரே சைவசமய முன்னேற்றத்திற்கு நற்றமிழ் வளர்ச்சிக்கும் அவர்கள் எழுதிய நுல்கள், கட்டுரைகள் அளப்பரியன அவற்றை எல்லாம் சேர்த்து ஒருநூலகம் அமைத்து விடலாம். இவருடைய சொற்பொழிவுகளைப் பன்முறை கேட்டு மகிழ்ந்தோம். அவர் பேச்சு ஒரு தனிப் பாணி. அதில் தத்துவார்த்தங்கள், அறிவுரைகள் ஆராய்ச்சிகள் ஆகியன நிறைந்திருக்கும் எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் இலகுதமிழாகவுமிருக்கும். இவை வெறும்புகழ்ச்சியல்ல. சொக்கன் நோயின்றி நீடுவாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்குமான அவரின் அரிய சேவை தொடர வேண்டுமென எல்லாம் வல்ல பரம் பொருளின் பாதார விந்தகங்களை உமைரக்தியானித்து அவர்களுக்கு எமது நல்லாசிகளை வழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

யாழ் ஆயர் அதிவண
வ, தியோகுப்பிள்ளை ஆண்டகை

## வாழ்த்துரை

''சொக்கன்'' என்னும் புனைபெயரில் தமிழ் மக்களால் நன்கறியப் பெற்றவராகிய வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் M. A. அவர்கள் இறைவன் திருவருளால் பல வகையான ஆற்றல்கள் நிரம்பப் பெற்ற ஒரு மனிதன் ஆவார்.

இப்போது கோண்டாவில் இராமகிருஷண மகாவித்தியாலத்தில் அதிபராகக் கடமையாற்றி ஒய்வு பெறவிருக்கும் சிறந்த சேவையாளனும் நிர்வாகியுமான இவர் எழுத்துப் பணியிலும் புகழ் பூத்தவர். ''சொக்கன்'' என்னும் புனை பெயரில் சிறந்த தமிழ் எழுத்தாளனாக விளங்கி வருகிறார், பத்திரிகைகளில் அவரது எழுத்தோவியங்கள் அன்றும் இன்றும் பரவலாக வெளிவந்து கொண்டிருப்பதை யாவருமறிவர். சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், ஆராய்ச்சிக்கட்டுரைகள் முதலியனவாக அவரது ஆக்கங்கள் பல திறத்தவை

சென்றவிடமெல்லாம் சமூகப்பணியாற்றுவதிலும் தலை சிறந்தவர் 'கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்னும் கவிதைத் தொடருக்கு எடுத்துக்காட்டாக இருந்து வருகிறார்.

இந்த ஆசியுரையை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைவதுடன் திரு. சொக்கலிங்கம் அவர்கள் நீண்டகாலம் சுபகாலத்துடன் சிறப்புற வாழ்ந்து மேலும் மக்களுக்குத் தொண்டுகளாற்ற இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென ஆசித்து வாழ்த்துகிறேன்.

வடமாகாண கல்விப்பணிப்பாளர்
திரு இ. சுந்தரலிங்கம்

## வாழ்த்துரை

விழுமியங்களை எய்துவதற்கு ஒரு சமூகத்தின் உயிர் நாடியாக உழைக்கும் சமூகம் ஆசிரிய சமூகமே. நல்லாசிரியர்களைத் தெய்வமாகப்போற்றுவது எமது இந்து மரபு உயர் பண்ணுங் அருளும் கடவுள் நம்பிக்கையும் பெருந்தன்மையும் பலநூல் தேர்ச்சியும் நூற்பொருளை எடுத்துரைக்கும் ஆற்றலும் உலகியல் அறிவும் போன்ற உயர் பண்புகளை உடையவனே நல்லாசிரியனாவான்,

இத்தகைய உயர்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற நல்லாசிரியர்கள் சிலரே இன்று எம்மிடையே காணப்படுகின்றனர். இத்தகு நல்லாசிரியர்களுள் ஒருவராக எம்மிடையே வாழ்ந்து ஆசிரியப் பணி புரிபவரே 'சொக்கன்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு, க. சொக்கலிங்கம் அவர்கள். அவரைக் கற்பிக்கும் ஆசான் என்பதை விட வாழ்ந்து காட்டும் ஆதர்ச ஆசான் என்பதே பொருத்தமாகும்.

சொக்கன் அவர்கள் எமது கல்வித்துறையின் பெருஞ் சொத்தாகத் திகழ்பவர். ஆசிரியராக, அதிபராக, சேவைக் காலக்கல்வி ஆலோசகராக, பாடநூல் எழுத்தாளராக, பாடத்திட்ட வரைவு ஆலோசகராக விரிவுரையாளராக யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தானாகப் பல்வேறு துறைகளில் கல்வி வளர்ச்சிக்கு அவர் அளப்பரிய பணியாற்றியுள்ளார்.

மத்திய வங்கி உதவியுடன்

# கிராமப் புற வீடுகளுக்கு பற்றறி மின்வசதி திட்டம்

இலங்கை மின்சார சபையின் உதவியின்றி பின் தங்கிய கிராமப் பகுதிகளுக்கு மின் சாரம் வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கை மத்திய வங்கி தயாரித்துள்ளது.

பிரசக்தி' திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள இத் திட்டத்தின் கீழ் மின்சார வசதியற்ற பின் தங்கிய கிராமப் புற பகுதி மக்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு பற்றறிகள் வழங்கப் படும்.

சலுகை அடிப்படையில் கடனுக்கு வழங்கப்படும் இவ் பற்றறிகளோடு 80 வோல்ட் ஒளித் திறன் உள்ள டியூப் பல்பு ஒன்றும் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப் படும்.

பற்றறிகள் வங்கியின்திட்ட அதிகாரிகளின் உதவியுடன் 'சார்ஜ்' செய்யப்படும். உள்ளூரில்தயாரிக்கப்பட்ட பற்றறிகளே இந்த திட்டத்திற்காக உபயோகிக்கப் படும். (7கி)


## "விழிப்புலனற்றோருக்கும் இப்போது வாழ்வு உண்டு"

(நாவற்குழி)

விழிப்புலனற்றவர்களுக்கும் வாழ்வு உண்டு. இந்தச்செய்தி கிராம மக்கள் உட்பட சகல மக்களுக்கும் தெரிய வேண்டும். அதை ஒவ்வொருவரும் கிராமம் கிராமமாக எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது தான் அவர்களுக்கும் வாழ்வளிக்க முடியும்.

இவ்வாறு விழிப்புலனற்றோருக்கு பயிற்சிச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றிய பாடசாலை முகாமையாளர் ஏ. சி. கனகராசா தெரிவித்தார்.

நவீல்ட் பாடசாலையில் அதிபர் எஸ். டேவிட் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. எஸ். டேவிற் அங்குபேசுகையில், ''விழிப்புலனற்றவர்களை வீட்டிலே வைத்திருக்கும் நிலை மாறி அவர்களுக்கும் கல்விவசதி, வேலை வாய்ப்பு உண்டு என்பதை மனதில்கொண்டு நாம்செயற்பட வேண்டும். விழிப்புலனற்றவர்களுக்கு பல்கலைக்கழகம் வரை சென்று கல்வி கற்கும் வசதி செய்து கொடுக்கப்படும்'' என்றார். தையல் பயிற்சிபெற்ற 3 பெண்களுக்கு சான்றிதழுடன் தையல் மெசின்களும்அன்பளிப்பு செய்யப்பட்டன. இறுதியில் ''புதிய வாழ்வு புதிய பாதை'' எனும் நாடகமும் மேடையேற்றப் பட்டது.



யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் அண்மையில் தமது கொடித்தினத்தை நடாத்தினர். படத்தில் யாழ். மாநகர ஆணையாளர் வி. பொ. பாலசிங்கம் கொடியை இந்து இளைஞர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு பணத்தை பேரவைத் தலைவரிடம் உண்டியலில் இட்ட போது எடுக்கப்பட்ட படத்தை இங்குகாண்கிறீர்கள்.

## மாறுகண் இருந்தால்...

சுலபமாக இந்தக் குறையிலிருந்து தப்பலாம். சில சமயங்களில் சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக்கூட இந்தக் குறை ஏற்பட வாய்ப்பு உண்டு அறுவை சிகிச்சை மூலம் இதைக் குணப் படுத்திவிட முடியும்.

மாறுகண்இருந்தால்அதிர்ஷ்டம் என்று பலர் அதைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை! நிச்சயம் இது தவறான நம்பிக்கை. பிறந்த குழந்தைக்குக்கூட மாறுகண் இருக்கும் போது சரியான சிகிச்சை அளித்துவிட்டால் நல்லது.

இல்லையென்றால் நாளடைவில் கண்பார்வை மங்கி பார்வைபேடோய்விடும். மாறுகண்களில் சிலவற்றை ஸ்பெஷல் பயிற்சிகள் மூலமாகவும், சிலவற்றை அறுவை சிகிச்சை மூலமாகவும் குணப்படுத்தலாம்.

பார்வை போன முழு கண்ணையும் எடுத்துவிட்டு வேறு ஒருவரின் கண்ணை அப்படியே பொருத்துவது தான் கண் மாற்று ஆபரேஷன் என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். Cornea -வை மட்டும்தான் நல்ல கண்ணிலிருந்து எடுத்து பாதிக்கப்பட்ட கண்ணுக்கு மாற்றுகிறோம். ரிஸ்ட் வாட்ச்சின் மேலே இருக்கிற கண்ணாடியை மட்டும் மாற்றுகிற மாதிரிதான் இது.

கண் வங்கி என்ற இடத்தில் ஏகப்பட்ட கண்களை மொத்தமாக வைத்துக் கொண்டு கேட்கிறவர்களுக்குக்கெல்லாம் வேண்டியபோது எடுத்துக் கொடுப்பார்கள் என்பதும் தவறாகப் பரவியிருக்கிற ஒரு செய்தி. நல்ல கண் ஒன்று கிடைத்தவுடனேயே அதை M. K. Medium என்ற திரவத்தில் போட்டுக் குளிர்சாதன வசதியுடன் சில மணி நேரங்கள் வைக்கலாம்.

அதை எவ்வளவு சீக்கிரத்தில் பொருத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மற்றவர்களுக்குப் பொருத்தி விடுவார்கள். கண் தேவை என்கிற நிலையில் இருப்பவர்களின் விலாசம் தயாராக இருப்பதால் உடனடியாக அவர்களில் யாரையாவது தொடர்பு கொண்டு ஆபரேஷன் செய்து பொருத்தி விடுவார்கள்.

வருத்தமான விஷயம் - கண் தானம் செய்பவர்களின் எண்ணிக்கை தற்போது மிக மிகக் குறைந்துவிட்டது!

வைட்டமின் ஏ குறைவால் கண் பார்வை பாதிக்கப்படுகிறது. அதைத் தவிர்க்க கீரை வகை, கரட், ஈரல் மற்றும் மீன் போன்ற சத்துணவை உண்ணலாம். வைட்டமின்ஏ, முருங்கை இலையிலும் அதிகம் உண்டு.

லேட்டஸ்ட்டாக வந்திருக்கிற கண் சிகிச்சை முறை லேசர் சிகிச்சை. டயாபடீஸ், Eales போன்ற சில வியாதிகளினால் விழித்திரையில் உள்ள ரத்தக் குழாய்களில் சில மாற்றங்கள் உண்டாகலாம். இதைச் சிகிச்சை செய்யாமல் அப்படியே விட்டு விட்டால் ரத்தம் கசிந்து மெல்லக் கண் பார்வை குறையும்.

வேறு சில தொல்லைகளும் இதனால் உண்டாகலாம். லேசர் கதிர்களைப் பயன்படுத்தி வேண்டாத ரத்தக் குழாய்களைக் கண்ணுக்குப் பாதிப்பில்லாமல் எரித்து அழிக்க முடியும். இதனால் விழித்திரை மேலும் பாதிக்காமல் தடுக்கப்படுகிறது.

இன்னொரு நவீன சிகிச்சை முறையில் அல்ட்ராசானிக் அலைகள் பயன்படுத்தப்படுகின்றன. கண்ணுக்குப் பின்னால் உள்ள பகுதியைச் சில சமயத்தில் சுலபமாக ஆராய்ந்துவிட முடியாது, அப்படிப்பட்ட சமயங்களில் அல்ட்ராசானிக் அலைகளைக் கண்ணுக்குள் செலுத்தி நிலைமையை அறிய முடியும்.

கண்ணுக்குள் இருக்கும் துகள்கள் மற்றும் கண்ணுக்குள் உண்டாகும் புற்றுநோய், நரம்புகளின் நிலைமை ஆகிய வற்றை அறிந்து கொள்ள Ultra Sonography என்ற இந்தக் கருவி பயன்படுகிறது.

## ஊக்குவிப்பு பணம் கிடைத்தது

(முள்ளியான்)

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட இருந்த கஷ்டப் பிரதேச50வீத ஊக்குவிப்புப் பணத்தின் ஒரு பகுதி இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கும், யாழ் மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்குமே இப்பாது காப்பு ஊக்குவிப்புப் பணம் இம்மாதம் வழங்கப்பட்டது.

அடுத்தடுத்த மாதங்களில் கட்டம் கட்டமாக மிகுதிப் பணம் வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய அரச ஊழியருக்கும் இந்த ஊக்குவிப்புப் பணம் ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகத்தில் நேரப் பதிவு கருவி

யாழ் பல்கலைக்கழகத்திற்கு நேரப் பதிவு இயந்திரம் எதிர் வரும் ஜூலை மாதம் வந்து சேரவுள்ளது.

தற்போது நடைமுறையில் இருக்கும் கையெழுத்திடும் முறையினால் பல தவறான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4)

# விளையாட்டுச் செய்திகள்

## தில்லானாவின் சாதனை

(தாளையடி)



அகில இலங்கை கனிஷ்ட தேசிய விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற போது தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த செல்வி சபாரத்தினம் தில்லானா சுமங்கல்யா 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

இதே விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கதையும் நீளம் பாய்தலில் மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் பெண்கள் பிரிவில் 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றதுடன்100 மீற்றர், நீளம் பாய்தல் போட்டிகளில் முன்னைய சாதனைகளை முறியடித்து புதிய சாதானைகளை ஏற்படுத்தினார்.

இவர் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மாணவியுமவார். (18 கி)

## கிரிக்கட் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட திரிசாரணர் குழு (நல்லூர்) பிரிவினர் மறைந்த சாரணர் மாவட்ட ஆணையாளர்கள் ஞாபகார்த்தமாக மென்பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டிகளை நடத்தவுள்ளனர். வரதலிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்துக் கிறிக்கட் சுற்றுப்போட்டி 6 ஓவர் கொண்ட 6 பேர் பங்குபற்றும் போட்டியாக அமையும். இப்போட்டியில் வெளிக்கழகங்கள் பங்கு பற்றலாம் எனவும். சச்சிதானந்தம் வெற்றிக் கேடயத்துக்கான 20 ஓவருக்கான போட்டியில் சாரணர் துருப்புக்கள் மாத்திரம் பங்கு பற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சத்திதானந்தம் வெற்றிக்கேடயத்துக்கான போட்டியில் பங்கு பற்ற விரும்பும் சாரணர் துடுப்புக்களும், வரதலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்களும் 15ம்திகதிக்கு முன்புதமது விண்ணப்பங்களை ஆர். ஆர். ராஜகுமார் 14, அரச வீதி நல்லூர் யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (கி)

## ஈட்டி எறிதல் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற மெல்வல்லுநர் போட்டியில் 'ஈட்டி எறிதலில்' காரைநகர் கோவளம் இளைஞர் மன்ற வீரர் செ. ஞானசோதி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப் போட்டியில் இவர் 48.48 மீற்றர் தூரம் 'ஈட்டி எறிந்து' முன்னைய சாதனையை முறியடித்துள்ளார். இதுவரை யாழ்.இந்து முன்னாள் வீரர் எஸ்.தயாளன் 43.87 மீற்றர் எறிந்த சாதனையே இருந்து வந்தது.

அகில இலங்கை ரீதியில் விரைவில் நடைபெறவுள்ள போட்டியில் வீரர் செ.ஞானசோதி கலந்து கொள்ளவுள்ளார். அகில இலங்கை ரீதியில் ஈட்டி எறிதலில் 58 மீற்றரே சாதனையாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## நாளை புத்தூரில்

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும், வளர்மதி சனசமூக நிலையமும் இணைந்து நடத்த இருந்த முதலாவது மின் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு நாளை 3-ம் திகதி இரவு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை நிகழ்ச்சிகளாக மரதன் ஓட்டம், ஆண்கள், பெண்கள், பங்கு கொள்ளும் சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இடம் பெறும்.

இரவு நிகழ்ச்சிகளாக இறுதிப்போட்டிக்குத் தெரிவான விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றும் கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்) 6 பேர், 4 பேர் கொண்ட போட்டியும் செற் அப் போட்டியும் பெண்களுக்கான எறிபந்தாட்டப்போட்டியும் இறுதியாகப் பரிசளிப்பு வைபவமும் நடைபெறும்.

## ஜெட் லைனேஸ் கழக போட்டிகள்

(விளையாட்டுத்துறை நிருபர்)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 21 வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு ஜெட் லைனேஸ் கழகம் 7 பேர் கொண்ட 12 ஓவர் கிரிக்கட் சுற்றுப் போடடி, 6 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி, 4 பேர் கெண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி என்பன கழகங்களிடையே நடாத்தவுள்ளது. விண்ணப்ப இறுதித் திகதி 03. 06. 90 போட்டிகள் யாவும் ஜெட் லைனேஸ் கழக மைதானத்தில் நடைபெறும்.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (16)

# காணிப்பதிவு முறைக்குப் பதிலாக மூலப்பதிவு முறை அமுலாகும்

தற்போது அமுலில் உள்ள காணிப்பதிவுக்கு பதிலாக காணி மூலப் பதிவு முறை ஒன்றை அமுல் நடத்த காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

உத்தேச புதிய முறையின் கீழ்க் காணிகள் சரிவர அளவிடப்பட்டு எல்லைகள் தெளிவாக வகுக்கப்பட்டு பதிவு செய்யப்படும்.

காணிகளை விற்பதிலும் வாங்குவதிலும் உள்ள பல பிரச்சனைகள் இதனால் நீங்கி விடும் எனத் தெரிய வருகின்றது.

முதலில் அரசாங்கக் காணிகளில் இப்புதிய முறை அமுல்படுத்தப்படும். அதன் பின் கட்டம் கட்டமாக தனியார் காணிகளுக்கும் அமுல் நடத்தப்படும்.

இம் முறையை நடைமுறைப் படுத்தும் வகையாக இரு சட்ட மூலங்கள் தயாரிக்கப் பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டதன் பிற்பாடு நிறைவேற்றப்படும்.

மூல உறுதிப் பதிவுச் சட்டம் மதிப்பீட்டு வரைபட சட்டம் ஆகியனவே புதிதாக கொண்டு வரப்படவிருக்கும் சட்டங்கள்.

காணிப்பதிவு அமுல் சரிவர நடைபெற்றால் காணிப் பிரச்சனைகள் தீர்ந்து சமூகங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படும். மனித உறவும் அபிவிருத்தியடையும் என சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

(7-கி)

## பாடசாலை தொகை மதிப்பீடு பத்து நாட்களுள் முடிக்க கெடு

கல்வி அமைச்சினது வேலைத் திட்டங்களை திட்டமிடுவதற்கும், அவற்றைச் செயற்படுத்துவதற்கும் அத்துடன் மாகாண மட்டத்து வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் பாடசாலைத் தொகை மதிப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியில் உள்ளபடி கணக்கெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது இக் கணக்கெடுப்பு ஜூன் மாதம் முதல் பத்துத்தினங்களுக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். டி. டி. பீறிஸ் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இத்தொகை மதிப்பு எடுப்பதற்கான பட்டோலை (கேள்விக்கொத்து) சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இப்பட்டோலையை பிழையின்றி திருத்தமாக நிரப்புவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்றும் ஏதும் விளக்கங்கள்தேவைப்படின் கொத்தணி அதிபர், அல்லது கோட்டக் கல்வி அதிகாரி அல்லது புள்ளிவிபரவியளாளருடன் அதிபர்களைத் தொடர்பு கொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார்.

இக்கேள்விக் கொத்து ஜூன் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் நிரப்பிகொத்தணி அதிபரிடமோ அல்லது கோட்டக் கல்வி அதிகாரியிடமோ ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 43

## வட-கிழக்கு மாகாணங்களுக்கு

## நான்கு ஜெனரேற்றர்கள் பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பு

வட-கிழக்கு மாகாணத்திற்கென நான்கு நவீன ஜெனரேற்றர் இயந்திரங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கியுள்ளது.

யாழ் மாநகரசபை மின்சார நிலையத்திற்கு இரண்டும், கிழக்கு மாகாணத்திற்கு இரண்டும் என்ற வகையில் பிரிட்டிஷ் அரசாங்கம் நான்கு ஜெனரேற்றர்களை அனுப்பியுள்ளதாகவும், இந்த ஜெனரேற்றர்கள் தற்பொழுது கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஜெனரேற்றர்கள் சுன்னாகம் மின்சார நிலையத்தில்உள்ளது போன்றதே என்றும் தெரிவிக்கப்பட்டதுடன் மாநகர எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் மின்சாரம் இல்லாத வேளைகளில் இவை மூலம் மின்சாரம் வழங்கப்படுமெனவும்தெரிவிக்கப்பட்டது.

(4)

## சுவையானசெய்திகள்

### வரதட்சணை தண்ணீர் மட்டும்

திருமணத்திற்குவரதட்சணையாக பணம், நகை, வீடு எனப் பல வகையாக நம் ஆண்கள் வாங்குவதைக்கேள்விப் பட்டிருக்கின்றோம். ஆனால் இந்தியாவில் உள்ள ஜீனகம் என்ற இடத்தில் ஒரு திருமணம் நடந்தது. இதில் மணமகனின் பெற்றோர் மணமகளின் பெற்றோரிடம் ஒரு வித்தியாசமான வரதட்சணையைக் கேட்டார்கள்.

வரட்சியான பகுதியில் இருக்கும் மணமகன் வீட்டாருக்கு குடி தண்ணிர்ப் பஞ்சம். இதனால் மணமகன் வீட்டாருக்கு மணமகள் வீட்டார் தொடர்ந்து சில மாதங்களுக்கு வண்டியில் குடிதண்ணீரை அனுப்பி வைத்தால் போதுமாம். வேறு நகை பணம் எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டார்களாம்.

### திமிங்கிலக் கறி ரெடி

ஜப்பான் நாட்டினர் அவரைக் காய்க்கு அடுத்து திமிங்கிலக் கறி சாப்பிடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். சமீபத்தில் 20 வகைத் திமிங்கிலங்களின் கறியைச் சமைத்து ஒரு முக்கியமான ஆராய்ச்சிக் கூடத்தின் உறுப்பினர்களுக்குப் பரிமாறினார்கள்.

ஆராய்ச்சிப் பணிக்குமட்டுமே திமிங்கிலங்களைவேட்டையாடலாம் என்ற நிலையில் இருக்கும் போது ஜப்பானியர்களோ சாப்பாட்டிற்காக திமிங்கில வேட்டையில் இறங்கிவிட்டனர்.

### நாயாருக்கு வந்த 'ஹாட்அட்டாக்'

ஒரு டி. வி. நிகழ்ச்சியைப் பார்த்து ஒரு பெரிய நாய் இறந்தே விட்டது. இந்த நிகழ்ச்சி பற்றிய செய்தி ஷாங்காய் எனும் சீனத் தினசரியில் வெளியாகியிருக்கிறது

கிழக்கு ஜேர்மனியில் எடுக்கப்பட்ட ஒரு பயங்கரப் படத்தை ஒரு பணக்காரர் அவரது அன்பிற்குரிய பெரிய நாயுடன் டெலிவிஷனில் பார்த்துக்கொண்டிருந்தார்.ஒரு காட்சியில்'தாடி மனிதன் ஒருவன் புதர்களுக்குள் இருந்து வெளிப்பட, அதைப் பார்த்த நாய் அலறித் தீர்த்தது.

பணக்காரர் என்ன சமாதானப்படுத்தியும் நாயின் அதிர்ச்சி நீங்கவில்லை. பத்தே நிமிடங்களில் அந்த நாய் டி. வி. எதிரிலேயே உயிரை விட்டு விட்டது. டாக்டர்கள் நாயைப்பரிசோதித்தபின் 'ஹாட்அட்டாக்' கினால் இறந்தது என்று அறிவித்தார்கள்.

## ஒய்வூதிய வவுச்சர்கள் வந்துசேர்ந்தன

யாழ் மாவட்ட ஓய்வூதிய காரர்களுக்குரிய ஜுன் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

இந்த வவுச்சர்களை தபாலில் இடும் வேலைகள் இன்று பூர்த்தியாக்கப்படும். அனேகமாக நான்காம் திகதிக்கு முன்னர் ஓய்வூதிய காரர்களுக்கு அவர்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைத்து விடும்.

5 ம் திகதி ஓய்வூதியகாரர் தத்தமது வங்கிகளில் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமென செயலக ஓய்வூதியப்பிரிவு உயரதிகாரி ஒருவர் முரசொலிக்குத் தெரிவித்தார்

## கோப்பாயில் பனைவளம் அருருகிறது

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில் தனியார்க்குச் சொந்தமான காணிகளில் இருந்து பெருந்தொகையான பனை மரங்களை தனியார் மரக்காலை உரிமையாளர்களால் தறிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இப்பகுதிகளில் பனைகளின் விலையும் அதிகரித்துள்ளது.

வைரம் குறைந்த சோத்திப் பனைகளும் கூட இலாப நோக்கில் இவர்களால் தறிக்கப்பட்டு வருகின்றன.இதனால் இவற்றிலிருந்து வெட்டப்படும் மரங்களை கொள்வனவு செய்வோர் ஏமாற்றப்படும் அதே வேளையில் கிராமத்தின் பனை வளம் குன்றிச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### உத்தரவு பெற்ற வர்த்தகரின் தவறானசெயலை நிருபிக்கதயார்

ஆசிரியர்
முரசொலி

'முரசொலிக்கு வந்த கடிதங்கள்' தலைப்பில் தங்களது 30. 5. 90 தேதிய பத்திரிகையில் உத்தரவு பெற்ற வர்த்தகர் சேவையை நுகர்வோர் அறிவர் என்னும் தலைப்பில் உத்தரவு பெற்ற வர்த்தகர் தலைவர் திரு. செல்லத்துரை அவர்கள விடுத்த அறிக்கை முற்றிலும் உண்மைக்கு மாறானவை. அவரது கடிதத்தில் 26, 5, 90 தேதியில் கூ ஊ தொ சங்கச் செயலாளர் முரசொலிக்கு விடுத்த அறிக்கை என்பது முற்றிலும் முரணானது'

யாழ்.ப.நோ.கூ சங்கத்தில் இணைக்கப்பட்டுள்ள உத்தரவு பெற்ற வர்த்தகர் சிலரது நடவடிக்கைகள் சம்பந்தமாக கூ. ஊ.தொ சங்க நிர்வாக சபையினரது தீர்மானப்படி கூட்டுறவு அமைச்சின் செயலாளருக்கு கூ.ஊ. தொ. சங்க தலைவராகிய திரு. ப. அன்ரனி ஆகிய நானும் செயலாளராகிய திரு. த. தவராசாவும்ஒப்பமிட்டுஅனுப்பிய கடிதத்தின் பிரதி தங்கள் பத்திரிகைக்கு அனுப்பப்பட்டது உண்மை.

உத்தரவு பெற்ற வர்த்தகர்களுக்கு 1985 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம்ஆண்டுவரை அரச திணைக்கள உத்தியோகத்தர் சிலரது அனுசரணையுடன் அதிகரிக்கப்பட்ட சுமார் 13500 உணவு முத்திரைகள் விடயமாகவும் விகிதாசார முறையில் உணவு முத்திரைக்குரிய பொருட்களை பெற்றுக் கொள்ளும் உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் சிலர் அவற்றை பாவனையாளருக்கு வழங்காது பேக்கரிகளுக்கும்தனியாருக்கும் விற்பனை செய்வது சம்பந்தமாகவும் தகுந்தஆதாரங்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி தங்கள் பத்திரிகைக்கும் அனுப்பப்பட்டது. உத்தரவு பெற்ற வர்த்தகர்களது தவறான நடவடிக்கைகளை நாம் எந்த இடத்திலும் ஆவணங்களுடனும் சாட்சிகளுடனும் நிரூபிக்கத் தயாராக உள்ளோம் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

ப, அன்ரனி
தலைவர்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்
யாழ். பட்டணக்கிளை

### விலை கூட்ட உத்தரவு இல்லை, குறைக்க மட்டும் அது தேவையா?

ஆசிரியர்
முரசொலி

கடந்த 26.05.90 சனிக்கிழமைப் பத்திரிகைகளில் கோதுமை மாவினதும் பாணினதும் விலைகள் 28.05.90 திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்படும் எனவும், சீனியினதும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினதும் விலை குறைக்கப் பட்டுள்ளதாகவும் ஒரு செய்தி வெளிவந்தது.

ஆனால் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாவின் விலையைஅதிகரிக்க வேண்டிய தினத்துக்கு இருதினங்கள் முன்னதாகவே விலையை அதிகரித்து நுகர்வோரிடமிருந்து சட்டவிரோதமாக மேலதிகபணத்தை வசூலித்தது.அதேசமயம் பாண் பேக்கரி உரிமையாளருக்கும் மற்றையோருக்கும் மூடைக் கணக்கில் பழைய விலைக்கே மாவை விற்பனை செய்துள்ளது.

இவ்வாறு ஏழைகளுக்கு அதிக விலையிலும், பேக்கரி-தனியார் கடை முதலாளிமாருக்கு உரிய விலையிலேயும் விற்பனை செய்ததுஎந்த நீதியின் பாற்பட்டது என்ற வினா மக்கள் மத்தியில் பிறந்துள்ளது.

இந்த அநியாயத்திற்குச் சிகரம் வைப்பது போல இதே சங்கம் சீனியினதும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினதும் விலைகளைக் குறைக்கவேண்டி இருந்தும் இன்று வரை (29. 05. 90) குறைக்கவில்லை இது ஏன் எனக் கேட்கப் பட்ட போதுகச்சேரியிலிருந்து உத்தரவு வரவில்லை என்றுபதில் தரப் பட்டது.

சீனிக்கும் அரிசிக்கும் விலை குறைப்புப் பற்றி உத்தரவு வழங்காத கச்சேரி, கோதுமை மாவுக்கு விலை அதிகரிப்பு பற்றி எவ்வாறு அதுவும் குறித்த கால நிர்ணயத்துக்கு இரு தினங்கள் முந்தியே, விலை கூட்டிவிற்குமாறு உத்தரவு வழங்கியது என்ற வினா எல்லார் வாயிலும் அடிபடுகிறது.

கூட்டுறவு இயக்கம் யாருக்காக என்ற சந்தேகம் இச்சங்கத்தின் முறைகேடான இச்செயலால் வலுவடைகின்றது. கூட்டுறவு இயக்கத்தை கொச்சைப் படுத்தும் இச்சங்கத்தின் அநியாயங்களைத் தட்டிக்கேட்க இன்றைய சூழ்நிலையிலும் எவரும் இல்லையா என்ற வினா மக்கள் மத்தியில் எழுந்துள்ளது நியாயமானதே.

நாட்டின் நிருவாகத்திலும் மக்களின் நலன்களிலும் அக்கறை உள்ளவர்களும்,கச்சேரியும்,நல்லூர் ப.நோ.கூ.சங்க நிருவாகமும் மக்களுக்கு திருப்திகரமான பதில் தரவும் நடவடிக்கை எடுக்கவும் முன்வரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.நல்லூர் ப.நோ.கூ.சங்கம் திருப்திகரமான பதில் தருமா? அன்றி நழுவுமா?

திருநெல்வேலி. எஸ்.சுந்தரராஜன்



முத்தமிழில் எத்துறையும்
பத்திரமாய்க் கூடிவரும்
வித்தகனைப் பாடுவதோர் சுகமே!-தனி
முத்திரையை இத்தரையில்
நித்தியமாய் இட்டவனைச்
சத்தியமாய்ப் பாடுவதென் அகமே!-கவிச்
சித்திரம்போ லாடிவரும்;
செந்தமிழைச் சூடிவரும்;
சொக்கனைத்தான்பாட வருந்தினமே!-அட
இத்தரையில் அப்புலவன்
வித்தைகளைப் பாடுகிறேன்;
சத்தியமாய் அவன் ஈழ இனமே!

சொக்கனின் பணிதொடர வாழ்த்து

## சித்ராலயா

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


# இன்றைய நிகழ்ச்சிகள்

## முகத்துவாரத்தில்

பரிசுத்த ஆவியானவர் பெருவிழா இன்று சனிக்கிழமை மபலை 7 மணிமுதல் ஞாயிறு அதிகாலை 5 மணி வரை முகத்துவாரம் புனித டிலா சால் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த செப வழிபாடுகள் தமிழ் மொழியில்நடைபெறும் என வழிபாட்டு ஏற்பாடுகளைச் செய்துள்ள கொழும்பு புனித சாசியா பேராலய கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி மன்றம் அறிவித்துள்ளது.

## சுன்னாகத்தில்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. முதன்மை விருத்தினராக மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.க. குலசேகரன் கலந்துகொள்ளுவார்

## வேலணையில்

கிராமிய அபிவிருத்தியில் மாற்றும் கருவிகளாக பெண்கள் என்ற தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை வேலணை துறையூர் கிராமத்தில் நடை. பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சிக்கன கடன் வழங்கு சபை மகளிர் பிரிவுத் தலைவி திருமதி.என். ஜெகதீசன் கலை இலக்கிய வட்டத் தலைவர் கே.சோதிதாஸ் புங்குடுதீவு மகா வித்தியாலய ஆசிரியர் .எஸ். சண்முகவடிவு மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் திருமதி சரோஜா-சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள்.(7-கி)

## வரணியில்

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

அதிபர் .கே. தம்பு தலைமையில் நடைபெறஇருக்கும் போட்டியில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் பிரதம விருந்தினராகவும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் .பூ.சுந்தரம் பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் உடற்கல்வி கல்வியதிகாரி த .அருணகிரிராஜா வரணி கொத்தணி அதிபர் .சி் துரைராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள் சேவல்பிட்டி கந்தசுவாமி கோவில் ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ இ .குகதாச சர்மா மங்கள விளக்கேற்றி இவ்விழாவை ஆரம்பித்துவைப்பார்
(ப-5 கி)

## அளவெட்டியில்

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் 5 ம் திருவிழா இன்று நடைபெறுகின்றது.சிதம்பரநாதன், குமரகுரு, சுதந்திரன் ஆகியோரின் மேளக்கச்சேரிகளும் இன்று அங்கு நடைபெறவுள்ளது.

'பாவியைக் கொன்றது நீதியா? அநீதியா? என்னும் பொருள் பற்றி பட்டி மன்றம் இரவு நடைபெறும். இதில் நடுவராக அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ· ஜெயராஜ் கலந்து கொள்வார். மற்றும் அனுமார் ஆட்டம்பொய்க்கால் குதிரை ஆட்டம்,பொம்மைஆட்டம்,வாணவேடிக்கை என்பனவும் இன்று அங்கு இடம் பெறவுள்ளன.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

22 ''கலர் சொனி ரீவீ பாவித்ததுதினமும்காலை 9 மணியிலிருந்து 1 மணி வரை பார்க்கலாம் ''றாதா ஸ்ரோஸ்' 41 றக்கா வீதி (குளத்துக்கு முன்னால்) யாழ்ப்பாணம்
06010


## புதியநியமனம்

(உருத்திரபுரம்)

உருத்திரபுரம் பிரதேச முதலுதவிப்படையின் பொறுப்பு அதிகாரியாக செல்வி . க .கலாமதி நியமிக்கப்பட்டுள்ளார் அண்மையில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோவிலில் செல்வி · க .கலாமதி தலைமையில் இருபது முதலுதவி படையினர்கள் சேவையாற்றியமை இங்குகுறிப்பிடத்தக்கது.(ப.6)


# COMPUTER கல்வி

திறமை, தகுதி, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் IBM Computer களில் கல்வி

BASIC, d BASE III+, LOTUS 1,2,3
Word Star 5 0, Auto CDA
Diploma

கொழும்பு

**ICC** இன் யாழ் கிளை
102. 3-ம் குறுக்குத்தெரு

பதிவு திகதி: 06-06-90 அல்லது முன்பாக
06090



பிரயாணம்! பிரயாணம்!! பிரயாணம்!!!

# "M" THREE TRAVELS

வழங்கும்
சவூதி அரேபியா, மாலைதிவு
பிரயாணங்கள்

★ சவூதி அரேபியா (Saudi Arabia)

| | Vacancy | Salary | |
|---|---|---|---|
| 1. Supervisor | 4 | 650 | SR |
| 2. Forman | 6 | 950 | '' |
| 3. Driver | 5 | 550 | '' |
| 4. Labourers | 175 | 350 | '' |
| 5. Cleaners | 60 | 350 | '' |
| 6. ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்கள்-பெண்கள் (Hospital Cleaners - Ladies only) | வெற்றிடம் 10 | | |
| 7. வீட்டுப்பணிப் பெண்கள் (House Maids) | வெற்றிடம் 10 | | |
| 8. வீட்டுச் சாரதி (House Drlvers) | வெற்றிடம் 05 | | |

மாலைதிவு [Maldives]

| | | | |
|---|---|---|---|
| 1. Architect Assistant | 1 | 200—250 | U. S. D. |
| 2. Carpenters | 3 | 150—200 | '' |
| 3. Masons | 10 | 150—200 | '' |
| 4. Draftsman (சம்பளம் (நேர்முகப்பரீட்சையில் தீர்மானிக்கப்படும்) | 2 | | |
| 5. Plumbers | 2 | 150—200 | '' |
| 6. Welders | 10 | 250—300 | '' |
| 7. Diesel Petrol Mechanics | 5 | 250—300 | '' |
| 8. Computer Operator | 1 | 350 | '' |

★ நேர்முகப் பரீட்சை கொழும்பில் (Colombo) விரைவில் நடைபெறும்.

★ எமது நிறுவனம் மூலம் சென்றவாரம் பிரயாணம் செய்தவர்களுடைய அடையாள அட்டைகள் எமது காரியாலயத்திலுள்ளன. உறவினர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும்.

★ PASSPORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்துகொடுக்கப்படும்.

★ நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## "M" Three Travels

தலைமை அலுவலகம்
"இந்திர பவனம்"
சோதி வீதி,
காங்கேசன்துறை

கிளை அலுவலகம்
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

06020



# தொழிற் பயிற்சிகள்

★ **Airconditioning & Refrigeration**

நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ்நகரில் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலைசெய்வதற்கு ஏற்றவாறு செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Spoken English**

ஒருமாத முழுநேர வகுப்பும் சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்களும் நடைபெறும்.
அச்சடித்த பாடக்குறிப்பு இலவசமாகவழங்கப்படும்

★ **றேடியோ ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்**

ரெலிவிசன், வீடியோ, டெக், றேடியோ திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்:— 4 மாதம்

★ **றீவைண்டிங்**

ரான்ஸ்போமர், மின்மோட்டர், மின் விசிறி, ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 2 மாதம்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்:
6.6.90 (கிழமை நாட்கள்)
9.6.90 (சனி, ஞாயிறு)

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரெயில்வே கடவையருகாமை)
06012

## யாழ். பல்கலைக் கழகத்திற்கு பிரிட்டிஷ்

# 1 3/4 கோடி பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பு

பிரிட்டிஷ் கவுன்ஸில் சுமார் 1 3/4 கோடி ரூபா பெறுமதியுடைய பொருட்களை யாழ் பல்கலைக் கழகத்திற்கு இந்த மாத முடிவுக்குள் அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

கம்பியூட்டர், குளிரூட்டி அந்தங்கள், விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள், மருத்துவபீட உபகரணங்கள் என்பன கொண்ட இப்பொருட்கள் லண்டனில் இருந்து கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டு சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப் படாமல் நேரடியாக யாழ் பல்கலைக்கழகத்திற்கு ரயில் மூலம் அனுப்பப்பட்டு அங்கேயே சுங்கப் பரிசோதனை மேற் கொள்ளப்படுமெனவும் இதற்காக சுங்க அதிகாரிகளும் யாழ் பல்கலைக் கழகம் வருவார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டது. (ஸ்ரீ-4)

## திருமலை மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் அபாயம்

திருகோணமலை மாவட்டத்தில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருகின்றதென வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

மிகவும் பாரதூரமான விளைவை ஏற்படுத்தக் கூடிய இந்தக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் யாவும் அதிதீவிரமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மலேரியாத் தடுப்புப் பிரிவினர் இரவு பகல் பாராது வீதிகளிலும், வீடுகளிலும் மருந்தினைத் தெளித்து வருகின்றனர்,

இது குறித்து பொது மக்களுக்கும் ஒலி பெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் கூறப்படுகின்றது.

இந்நோயினால் பலர் பீடிகக்கப்பட்டு மருத்துவ மனைகளில் சிசிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்கள் (ஸ்ரீ)

### யாழ். மாவட்ட

## அதிபர், ஆசிரியர் டிமிக்கி தடுக்க நடவடிக்கை

யாழ். கல்வி அலுவலகத்திற்கு வரும் அதிபர்கள் ஆசிரியர்கள் பற்றிய விவரங்களைப் பதியும் புத்தகம் ஒன்று யாழ் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இங்கு வரும் அதிபர்கள் ஆசிரியர்கள் தமது பெயர், முகவரி, கற்பிக்கும் பாடசாலை, அலுவலகத்திற்கு வந்த நேரம், காரணம் சந்திக்க விரும்பும் அதிகாரி ஆகிய விவரங்களுடன் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் பிரஸ்தாப புத்தகத்தில் பதிய வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் அடிக்கடி கல்வி அலுவலகத்திற்கு செல்வதாகக் கூறி லீவு எடுப்பதை கண்காணிக்கவும், அலுவலகத்திற்கு அடிக்கடி வருவதைக் குறைக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

### கொழும்பில்

## உணவுப் பார்சல் விற்பனை தடுக்க சட்ட நடவடிக்கை

கொழும்பு நகரில் ஆங்காங்கே உணவுப் பார்சல்கள் விற்பனை செய்வதும், வான்களில் சென்று உணவுப் பார்சல்கள் விநியோகம் செய்வதும் தடை செய்யப்படும்.

கொழும்பு நகரில் இயங்கும் இத்தகைய விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பார்சல்களை விநியோகம் செய்வோர் முதலில் மாநகர சபையிடம் அதற்கான அனுமதி பெறவேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உணவுப் பார்சல்களில் சம்பந்தப்பட்ட விற்பனையாளர்களின் முகவரி தெளிவாகக் குறிப்பிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ))

### காங்கேசன்...

சாலை உற்பத்தி முறைகள் பார்வையிட வருகின்றன. எனினும் இப்பாடசாலை மாணவர்களை தொழிற்சாலை நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்ட வழிகாட்டிகள் இங்கு இல்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சாலை ஊழியர்களே வழிகாட்டிகளாக செயற்படுவதால் அவர்களின் வேலை நேரம் குறைவடைவதுடன் இவர்களது ஓய்வு நேரமும் பாதிக்கப்படுகின்றது.

### இந்திய...

ஐரோப்பாவில் இன்றும் பல நாடுகளில்வல்லரசுத் தளங்கள் இருக்கின்றன.

இலங்கையில் ஒற்றுமையை பேணவே இலங்கை இந்திய ஒப்பந்தம்செய்யப்பட்டதுதீவிரவாத குழுவொன்று ஆயுதங்களை ஒப்படைக்காததினால் இந்தியப்படை யுத்தம் நடத்தியது'' என்றார் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா. (ஸ்ரீ)

## மெய்வல்லுனர் போட்டி

கிளிநொச்சி மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி நாளை பிற்பகல் பரந்தன் பயிற்சி நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார். (35)

### கிளிநொச்சியில்...

பயணிகளும், பொது மக்களும் பெரிதும் அசௌரியம் அடைய நேரிட்டுள்ளது.

இக்கும்பலின் இந்த அடாவடித்தனத்திற்கு உண்மையை எழுதி மக்களின் பேரபிமானத்தைப் பெற்ற 'முரசொலி'யில் வெளிவந்த கிளிநொச்சி வைத்தியசாலை தொடர்பான 'நேரடி றிப்போட்டே' காரணமெனச் சொல்லப்படுகிறது.

## விவசாயப் பயிற்சி 11ம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் புதிய மாணவர்களுக்கான ஒரு வருடகால விவசாயப் பயிற்சி நெறி 11ம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.

அன்றைய தினம் மாணவர்கள் 100 ரூபா செலுத்தி தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி மேற்படி நிறுவனத்தின் அதிபர் அறிவித்துள்ளார்.

கடந்தமாதம் நடைபெற்ற மேற்படி துறைக்கான நேர் முகப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு மட்டுமே அழைப்புக்கள் அனுப்பிவைக் கப்பட்டுள்ளன. (44 கி)

### வடக்கு...

புலிகள் தூதுக்குழுவினருடன் கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நேற்றுக் காலை நடத்திய பேச்சுவார்த்தைகள் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி விவசாய, நிர்வாகப்பிரச்சினைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக்குழுவில் திருவாளர்கள் கோ.மகேந்திரராஜா (மாத்தயா) யோகரத்தினம் (யோகி) கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், மகளிர் முன்னணி முக்கியஸ்தர் ஜெயா ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். ஜனாதிபதியுடன் நீதியமைச்சரும், வட, கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவருமான ஜனாப் ஏ. ஸி.எஸ் ஹமீத்தும் சமுகமளித்திருந்தார்.

### நிலைமை பெருமளவு சீர்

இந்திய அமைதிப்படை வெளியேறியபின் கடந்த மூன்று மாதகாலமாகவடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலைமை பெருமளவு சீரடைந்துள்ளதுஎன்று விடுதலைப்புலிகள் தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

சிவில் நிர்வாகம் சீராக நடைபெறுகிறது என்றும்சகல துறைகளிலும் பொது மக்களின் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மாகாணசபை உடனடியாகக் கலைக்கப்பட்டு அங்கு மீண்டும் தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கில் அரசியல் நிர்வாகம் சீராக இயங்க இவை வழிகோலுமென்றும் தூதுக் குழுவினர் கூறினர்.

அரசியலமைப்பின்ஆறாவது ஷரத்தை நீக்க வேண்டும் என்றும் அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டனர்.

### வெறுமை நீங்கும்

ஜனாதிபதி பேசுகையில் அரசியல் வெறுமை நிலையை நீக்கிவைப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் வடக்கு. கிழக்குப் பகுதியில் உள்ள மக்கள் நேர்மையாக நடத்தப்படும் தேர்தலில் தமது வாக்குரிமைகளைப் பயன்படுத்தி பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக் கூடியதாக இருக்கும் ''என்றார்.'

''நீதியும் நியாயமும் கொண்ட சமுதாயத்தைத் தான் கட்டியெழுப்ப இருப்பதாகவும் இதில் மக்களைப் பிரித்துவைக்கும் குறைபாடுகளை தீர்த்து வைக்கப் போவதாகவும் ஜனாதிபதி வலியுறுத்திக்கூறினார்

''இன ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் உறுதிப்படுத்துவதற்கு ஆக்கப் பூர்வமான சில நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. இலங்கையில் அமைதியும் சுபீட்சமும் நீடித்திருப்பதற்கு இவை முக்கியமானவை'' என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ)

### ஆரம்பப் பிரிவு சேவைக்கால

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சிவகுப்பு, செயலமர்வு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆசிரிய அலோசகர்களுக்கான பயிற்சி வகுப்பும் செயலமர்வும் கடந்த 25-ம் திகதி தொடக்கம் ஐந்து நாட்கள் திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்றது.

மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்ட இச் செயலமர்வு வகுப்பில் தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்டனர்.

பயிற்சி முடிவில் நடைபெற்ற இறுதி நாள் வைபவத்திற்கு கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திரு. க. நடராஜா பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார்.

பயிற்சி பெற்றவர்களுக்கு திருமதி. சா. நடராஜா சான்றிதழ்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஸ்ரீ)

## கொழும்பு டாக்டர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம்

முறையற்ற முறையில் அரச வைத்திய அதிகாரியாக கீதாஞ்சன் மென்டிஸ் நியமிக்கப்பட்டதாகக் கூறி அதை ஆட்சேபித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் அனைவரும் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நோயாளர்கள் மருத்துவ வசதிகள் இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான பிரச்சினையில் அரசு நடவடிக்கை எடுக்கத்தவறின் வேலை நிறுத்தம் மேலும் தொடரலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

### நெடுந்தீவு படகு

## பயணத்துக்கான கட்டணம் விரைவில் அதிகரிக்கும்

நெடுந்தீவுக்கு செல்லும் மோட்டார் படகு பிரயாணக் கட்டணம் வெகு விரைவில் அதிகரிக்கப்படவிருக்கின்றது.

பல வருடங்களாக குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நெடுந்தீவுத் துறைமுகத்திற்கு மோட்டார் படகில் பிரயாணம் செய்வதற்கான தனி நபர் கட்டணம் 50 சதமாக அறவிடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ 19)

### நேற்று முதல் கொடித்தின வாரம்

## தியாகி சிவகுமாரன் நினைவாலய நிதிக்காக

தியாகி சிவகுமாரன் நினைவாலயமும் சிலையமைப்புக்குமான நிதியைப் பெறும் பொருட்டு நேற்று முதல் ஒருவாரத்திற்கு கொடித்தின வாரம் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

இந்நினைவாலயமும் சிலையும் உரும்பராய் சந்தியில் அமைக்கப்பட்டுவருகின்றன.

சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் நினைவாலய அமைப்புக்குழுவினரால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கொடித்தின வாரத்தின் போது பொதுமக்கள் தங்களால் இயன்ற ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ)

## நூலக நேரம் நீடிப்பு

யாழ் மாநகர சபை நூலகத்தை மாலை 6 மணிவரை திறந்திருப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நேரத்தினை அதிகரிப்பதற்கான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாககவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ -4)

### படகுகள்...

பரிசோதனைக்காக சமுகமளிக்க வேண்டுமென கேட்கப் பட்டுள்ளனர்.

மோட்டார்ப் படகுப் பரிசோதனைகளுக்காக கொழும்பில் உள்ள கப்பல் துறை உயர்அதிகாரிகள்வருகைதந்து பரிசோதனை செய்து அண்றைய தினம் பிரயாணிகளை ஏற்றி இறக்குவதற்கான அனுமதியை வழங்கவிருக்கின்றனர். (ஸ்ரீ19)

### நாவலர்...

டைந்துள்ள இந்த அரங்கினைத் திருத்துவதற்கான முழு வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், நீண்டகால இடைவெளியின் பின்னர் இந்த விழாவினை எதிர் வரும் 7ந் திகதியன்று யாழ் நாவலர் மண்டபத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ4;

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6?ஆ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 02.06.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற து